18.08.2025

O.S.No. 157/2021

PW1– மணிவர்மன் – த/பெ. பெருமாள்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 18.08.2025

<u>குறுக்கு விசாரணை :</u> ( பிரதிவாதி தரப்பில்)

1. பிரதிவாதிகள் எனது சித்தப்பாவின் மகன்கள். பிரதிவாதியின் தந்தையும், எனது தந்தையும் உடன்பிறந்த சகோதரர்கள். பிரதிவாதிகளின் தகப்பனார் 1ம் பிரதிவாதிக்கு 4 வயது இருக்கும்போதே காலமாகிவிட்டார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியும், 2ம் பிரதிவாதியும் தனது தாய்வழி பாட்டியின் வீட்டில் வளர்ந்தார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி மட்டுமே அங்கு வளர்ந்தார். 2ம் பிரதிவாதி இங்குதான் இருந்தார். எனது தந்தை தற்போது உயிருடன் இல்லை. அவர் இறந்து சுமார் 30ஆண்டுகள் இருக்கும்.

2. பிரதிவாதியின் தகப்பனாரும், எனது தகப்பனாரும் இறந்தபின்பு பாகப்பிரிவினை நடைபெறவில்லை என்றால் சரியல்ல. பாகப்பிரிவினை நடைபெற்றது. இந்த வழக்கை பாதை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா பாதை பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட இடத்தில் உள்ளது என்றால் சரியல்ல. எனக்கு பாத்தியப்பட்ட இடத்தில் உள்ளது. எனக்கு பாத்தியப்பட்ட தபசில் சொத்திற்கு கீழ்பக்கம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது என்றால் சரிதான்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

ஓம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.